"விடுதலை" 29-6-09

# திராவிடமொழி ஆய்வுப் பேரறிஞர் வ.அய்.சுப்பிரமணியம் மறைந்தாரே!



தஞ்சை, ஜூன் 29 - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தரும் குப்பம் (ஆந்திரா) திராவிடப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவரும், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்தவருமான, திராவிட மொழி ஆய்வுப் பேரறிஞர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் இன்று மறைந்தார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

திராவிட மொழி சங்கம் (DRAVIDIAN LINGUISTIC ASSOCIATION) மற்றும் (INSTITUTE OF SCHOOL OF LINGUISTIC STUDIES) ஆகிய நிறுவனங்களை திருவனந்தபுரத்தில் நடத்தி வந்தவர்.

'திராவிடக் கலைக் களஞ்சியம்' (DRAVIDIAN ENCYCLOPAEDIA) எனும் அரிய கருவூலத்தை உருவாக்கியவர்.

பா.ஜ.க ஆட்சியில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரளிமனோகர் ஜோசியிடம் திராவிடக் கலைக் களஞ்சியத்தைக் கொடுத்த போது 'திராவிட' என்ற சொல்லை நீக்கலாமே என்று கூறியபோது, "தேசிய கீதத்தில் உள்ள 'திராவிட' என்பதனை நீக்கிவிட்டால், இதையும் நீக்கி விடலாம்" என்று முகத்துக்கு முகம் சொன்ன இனஉணர்வுப் பெருமகன் அவர் ஆவார்.

அடக்கமாக அருஞ்செயல் புரியும் சான்றோர் ஆவார். 1985 இல் சென்னை பெரியார் திடலில் திறந்தநிலை பல்கலைக்கழகம் சார்பில் 'சமஸ்கிருத மயமாக்கம்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றியவரும் ஆவார்.

இவரின் பிரிவு திராவிட மொழி மற்றும் திராவிட இனவரலாற்றில் மிகப் பெரிய இழப்பாகும். அவர் தொடங்கிய பணிகள் தொடரப்பட வேண்டும்; அந்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அந்தக் கடமையினை ஆற்றுவார்களாக!

அவர் பிரிவால் வருந்தும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்